# கிழக்கில் கட்சி வளர்ந்த கதை


சொல்லின்செல்வர்
செ. இராஜதுரை, பா. உ.

இலங்கை முழுவதும் தமிழரசுக் கட்சியின் ஆரம்பமும் — வளர்ச்சியும் எதிர்ப்பின் முனையிலும் — ஏளனத்தின் முன்னிலையிலுமே வளர்ந்தது.

தமிழரசுக் கட்சியின் முதலாவது பகிரங்கப் பிரசாரக் கூட்டம், நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் வீதி முன்றிலில் ஏற்பாடாகியிருந்தது. அக்கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். கூட்டம் பெருங்குழப்பத்தில் நடைபெறாது கலைந்தது.

கிழக்கிலங்கையின் சரித்திரம் வேறு விதமாக இருந்தது;

யாழ்ப்பாண மக்களுக்கும்—அரசியல் வாதிகளுக்கும் எதிராகக் கிழக்கிலங்கை மக்களின் எண்ணங்களும் — அரசியற் சிந்தனைகளும் வேரூன்றியிருந்த காலம்!



தமிழ்க் காங்கிரஸ் . திருகோணமலை வரைதான் தனது கொள்கையைப் பரப்ப முடிந்தது;

மட்டக்களப்புப் பகுதியிலே ஒரு பகிரங்கப் பொதுக் கூட்டத்தை நடத்த விடாமற் பொதுமக்களே ஒதுக்கிய காலம்!

படித்தவர்கள்—பணக்காரர்கள்—பாராளு மன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பு-யாழ்ப்பாணத் துவேஷத்திற்குத் தூபமிட்ட காலம்!

தமிழர் கட்சி அரசியல் மட்டக்களப்புப் பகுதியில் துளிர்விடாத காலம்!

அந்தக்காலத்தில் தமிழரசுக் கட்சியின் கருத்துக்களை இங்கு பரப்புவது—கல்லில் நார் உரிப்பது போலிருந்தது.

கல்லெறிகளுக்குக் கூட்டங்களிற் பஞ்சமில்லை;

நடுச்சந்திகளில், ஏவிவிடப்பட்டவர்களால் தாக்கப்பட்டோம்!

''மட்டக்களப்பை யாழ்ப்பாணத்துக்குக் காட்டிக் கொடுக்கின்றோம்,'' இப்படி—

இதைவிட மோசமான தூற்றுதல்களுக்கும்—வசைமாரிகளுக்கும் பஞ்சமில்லை;

அக்காலம், பகுத்தறிவு இயக்கம் இளைஞர்கள் மத்தியில் பரவியிருந்த காலம்!

கிராமத்திற்குக் கிராமம் பகுத்தறிவு இயக்க இளைஞர்கள் சிலர் இருந்தனர். துணிவும் — தைர்யமும் — கட்டுப்பாடும் — ஒழுங்குமுடைய இளைஞர்கள். இவர்கள் என் தலைமையை ஏற்றும், என் சொல்லைக் கேட்டுச் செயற்படும் அடக்கமும் — பக்தியுமுடையவர்களாகவும் இருந்தார்கள்.

இவர்களைக் கொண்டு ஆங்காங்கே பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்தோம்.

மட்டக்களப்புப் பட்டணத்தில் எங்கள் பகுத்தறிவு இயக்கப் பணிமனை தீக்கிரையாயிற்று! இயக்க இளைஞர்கள் தாக்கப்பட்டார்கள்!

தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டத்தை நடத்திய மறுநாள், பட்டணத்தின் மத்தியில்—பகல் வேளையில்-பகிரங்கமாகத் தாக்கப்பட்டேன்!

களுதாவளையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், யாரோ என்மீது அன்புகொண்ட அன்பன் எறிந்த கல் – என் இடது கண்ணைப் பதம்பார்த்தது.

மண்டூரில், மறைந்த தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அவர்களின் தாயகத்தில் கூட்டம் நடத்தச் சென்ற தந்தை செல்வா—தலைவர் வன்னியசிங்கம்—தளபதி அமிர்தலிங்கம் ஆகியோர் திருப்பியனுப்பப்பட்டனர்! பொதுக்கூட்டம் தடைசெய்யப்பட்டது. ஊர் முழுவதும் பெரும் குழப்பம்.

கல்முனையில், கூட்ட மேடையின் இருந்த மேசையும்—கடிகாரமும் காடையர்களால் எங்கள் முன்னிலையிலேயே எடுத்துக்கொண்டு போகப்பட்டன.

வந்தாறுமூலை—சித்தாண்டிக்குடி போன்ற இடங்களில், பொதுக்கூட்ட மேடைகளுக்கே போக முடியாமல் இருந்தது!

*1952* — பொதுத்தேர்தல் வந்தது. எங்கள் கட்சியின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்தப் பகீரதப் பிரயத்தனம் செய்தோம்;

கல்குடா—மட்டக்களப்பு—பட்டிருப்பு ஆகிய தொகுதிகளில் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேடி அலைந்தோம்.

படித்தவர்கள் வீட்டுப் படிக்கட்டுகளை ஏறி இறங்கினோம். பட்டதாரிகளைச் சந்தித்துப் பார்த்தோம்; சட்ட வாதிகளைக் கேட்டுப் பார்த்தோம். தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட—எவரும் முன்வரவில்லை!

இந்த நிலையிலே, நான் திருகோணமலைக்குச் சென்றேன். அங்கு முகாமிட்டுத் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டேன்.

*1952*ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், தந்தை செல்வா காங்கேசன்துறையில் தோற்கடிக்கப்பட்டார். அவருடைய தோல்வி—எங்களை யெல்லாம் உசுப்பிவிட்டது.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் எதிரிகள் கை ஓங்கியது. "யாழ்ப்பாணத்தில் தலைவரே தோற்றுவிட்டார்; இந்த கட்சி வளர்க்கிறார்களாம் கட்சி" என்று சந்திக்கு சந்தி—தெருவுக்குத் தெரு நின்று தூற்றத் தொடங்கினார்கள். இந்தச் சமயத்தில், நாங்களும் விடாது வேகமாகச் செயற்படத் தொடங்கினோம்.

கருத்தரங்குகள்—பொதுக்கூட்டங்கள் ஆங்காங்கு நடத்தினோம். கோயில்களில் இலக்கியப் பேச்சுக்கள்; அவை தமிழ்மக்களின் நாகரீகச் சிறப்பை—பண்டைய தமிழகத்தின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமையும்.

கல்லூரிகளில் — இலக்கிய மன்றங்களில் முழங்குவோம்; அவை தமிழர்களின் பொற்கால வாழ்வின் பெருமைகளையும்— இக்காலச் சிறுமைகளையும் கூறுவனவாக விருக்கும்.

*1956*—களனியில், யூ. என். பி.க் கட்சி 'சிங்களம் மாத்திரம்' தீர்மானத்தைப் பிரகடனம் செய்தது.

அத் தீர்மானத்திற்கெதிராக, மறைந்த லபுணபுரிவாவா தலைமையிலும், அவர் மாணவர் செட்டிபாளையம் செல்வநாயகம் அவர்கள் தலைமையிலும் அறப்

போர் அணித் தலைவர் அரியநாயகமும், நாங்களும் மட்டக்களப்பு மைதானத்தில் ஒரு யாகம் செய்தோம்.

மின்னல் வேகப் பிரசாரங்களை மேற் கொண்டோம்.

மறைந்த டாக்டர் பரமநாயகம், காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் ஆகியோர் கிராமங் கிராமமாக இயக்கப் பணிகளுக் குச் செய்த சேவை—மனக்கண்முன் வரு கின்றது.

தந்தை செல்வா—அருந்தலைவர் வன் னியசிங்கம்—அன்புநிறை டாக்டர் நாகநா தன்—தளபதி அமிர்தலிங்கம் ஆகியோர், காலத்திற்குக் காலம் நடாத்திய பொதுக் கூட்டங்களில் தூவிய மணிமணியான கருத் துக்கள்—வருங்காலத்தைப் படம் போட் டுக் காட்டிய தீர்க்கதரிசனமான பேச்சுக் கள்—கட்சியை வளர்த்தன; தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கையை யூட்டின.

1956 — பொதுத்தேர்தல் வந்தது. 'சிங்களம் மாத்திரம்' தீர்மானம் கொண்டுவரப்பட்டதனல், யூ. என். பி. யிலிருந்து திரு. எஸ். எம். இராசமாணிக் கம் விலகினர்; தமிழரசுக் கட்சியில் சேர்ந் தார். கட்சியில் அவர் வருகை, இப்பகுதி மக்கள் மனதில் நம்பிக்கையையும் - தைரி யத்தையுமளித்தது. கல்குடாவில் திரு. பொ. மாணிக்கவாசகர் கட்சியில் சேர்ந்தார். 1956—பொதுத் தேர்தலில் திருவாளர்கள்: இராசமாணிக்கம்-மாணிக் கவாசகர் போன்றோர் (தேர்தலில்) தோற் றாலும், மக்கள் கட்சியின் கருத்துக்களை ஏற்கும் வண்ணம், தேர்தல் மேடைகளைக் கொள்கைமேடைக ளாக்கினேம்.

கல்முனையிலும், பொத்துவிலிலும் முறையே: முதலியார் காரியப்பரும்- ஐனப் முஸ்தபாவும் வென்றார்கள்; சில மாதங் களில் கட்சியை விட்டு வெளியேறி, அர சாங்கத்துடன் சேர்ந்துகொண்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும்—கட் சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பின ராக நான் இருந்தேன். இக் காலத்தில் இளைஞனாகவும், தனித்தும் நின்ற எனக்குக் கைகொடுக்கவும்—கிழக்கு மாகாண மக்க ளுக்கு நம்பிக்கையளிக்கும் வகையிலும் தந்தை செல்வா செயற்பட்டார்.

ஆம்! 1956—திருகோணமலை நடை யாத்திரைக்குத் தான் மட்டக்களப்புக் கோஷ்டியுடன் சேரப்போவதாக அறி வித்து. மட்டக்களப்பிலிருந்து திருகோண மலை நோக்கி நடக்க முன்வந்தார். நடை யாத்திரை தொடங்கிய அன்று, 'தீர்க்க தரிசி செல்வநாயகம்' என்ற நூலை நான் வெளியிட்டு, மட்டக்களப்பில் ஏலத்தில் விற்று, நிதியைக் கட்சிக்குக் கையளித்தேன். இலங் கையில் தந்தை செல்வாவைப் பற்றி வெளி வந்த முதல் நூல் அதுதான்!

சிங்கள 'சிறீ'ப் போராட்டத்திலும், தந்தை செல்வா சிறீயை அழிக்க மட் டக்களப்புக்கு வந்தார்; சிறீயை அழித்து மட்டக்களப்புச் சிறைச்சாலையில் அடைக் கப்பட்டார்! அடுத்த வருடம், அவரு டைய பிறந்த நாளை மட்டக்களப்பு மைதானத்திற் கோலாகலமாகக் கொண் டாடினேம். அறுபத்து நான்கு (64) தாய் மார்கள் மாலையிட்டு வாழ்த்த—நான் மட்டக் களப்பு மண்ணில் விளைந்த நெல் மணிகளால் இழைத்த மாலையைச் சூட்டினேன். இலங்கை யில் தந்தை செல்வாவுக்குப் பிறந்த நாள் விழா வெடுத்த பெருமையும் மட் டக்களப்புக்கே உரியது.

1956க்குப் பின், மட்டக்களப்பு அர சியலில் சூடுபிடித்தது. 'சிங்களம் மாத்தி ரம்' சட்டத்தைத் தொடர்ந்தும் - சிறீப் போராட்டத்தை அடுத்தும் மட்டக்களப்புப் பகுதி எரிமலையாக மாறியது!

துறைநீலாவணையில், மக்கள் இராணு வத்தையே தாக்கும் நிலைக்கு ஆளானார்கள்! திரு. இராசமாணிக்கம் நிலைமைகளைத் திறமையாகச் சமாளித்தார்.

கல்குடாப் பகுதியில், துப்பாக்கிச் சூடுக ளும் கலவரங்களும் தலைதூக்கின! பொ. மாணிக்கவாசகர் பொறுமையோடு நிலை மைகளைச் சரிசெய்தார்.

மட்டக்களப்புப் பகுதியில், புகை வண்டி தடம் புரண்டது. அதைத் தொடர்ந்து எழுந்த குமுறல்களைத் துடிப்

புள்ள இளைஞர்கள் (அன்று அரசாங்க ஊழியர்கள். அந்நிலையில் அவர்களிற் சிலர் இன்னும் இருப்பதனல் பெயர்களை வெளியிட நான் விரும்பவில்லை) வெற்றிகரமாகச் சமாளித்தனர்.

மட்டக்களப்பு மக்கள் இதயத்தில் வேப்பங்காயாக—வேண்டாதவர்களாக வேரூன்றியிருந்த யாழ்ப்பாண வெறுப்புக் கெதிராகக் கட்சி வளர்ந்த கண்ணீர் நிறைந்த கதை; கல்லில் நார் உரித்த கதை; கத்தி முனையில் நடந்த கதை; அக் கதையின் முடிவு—மட்டக்களப்பு இன்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பாசறையாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது !

இப்பயணத்தை ஆரம்பித்த என்போன்ருேர்க்கு—இதைவிட இனிக்கும் செய்தி வேறென்ன இருக்க முடியும் ?

தமிழ் வாழ்க !

தமிழினம் வாழ்க !!

தமிழ் ஈழம் மலர்க !!!



அரசியல்வாதி யென்ருல்

ஓட்டு வாங்கவும் தெரியவேண்டும்
வேட்டு(த்) தாங்கவும் துணியவேண்டும்.

*  *  *  *

கட்சிகளுக்காக மக்கள் பலியாகக் கூடாது!
மக்களுக்காக(க்) கட்சிகள் பலியாகட்டும் !!

*  *  *  *

அடிக்கடி கட்சிவிட்டுக் கட்சி மாறுபவர்களை
எந்த அரசியற் கட்சியும் ஏற்றலாகாது !